# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
## IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE OF KARUR.
**Sessions Case No. 74/2024**

Prosecution Witness : **PW1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **கந்தசாமி** | **Father's Name** | : | |
| **Village** | : | | **Taluku** | : | |
| **Caste** | : | | **Calling** | : | |
| **Religion** | : | | **Age** | : | |

Solemnly affirmed in accordance with the Provisions of Act 44 of 1969 of the 09th day of February 2026.

**(எதிரி இன்று நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ளார். எதிரி தரப்பு வழக்கறிஞர் இன்று நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ளார்.)**

**முதல் விசாரணை**

நான் தற்போது தாந்தோணி காவல்நிலையத்தில் முதல்நிலை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 20.01.2022 ஆம் தேதியன்று பசுபதிபாளையம் காவல்நிலையத்தில் முதல்நிலை காவலராக பணிபுரிந்தேன். எனக்கு பீட் அலுவலாக புலியீர் புரவிபாளையம், கவுண்டம்பாளையம் பகுதிகளுக்கு நியமனம் செய்திருந்தார்கள். நானும் மு.நி.கா. சரவணன் 210 இருவரும் 20.01.2022 ஆம் தேதி இரவு 10.00 மணிக்கு புலியூர் புறக்காவல்நிலையம் சென்றிருந்தபோது புறக்காவல்நிலையத்தில் அலுவலில் ஊர்க்காவல் படையை சேர்ந்த HG 1596 செந்தில்குமார் என்பவர் அலுவலில் இருந்தார். நாங்கள் கொரானோ காலம் என்பதால் தமிழக அரசு தடை உத்தரவு அமலிலிருந்து வந்ததால் 10.00 மணிக்கு மேல் கடைகள் மூடப்பட்டுள்ளதா என்பதை ஆய்வு செய்ய ஆளுக்கொரு திசையாக சென்றோம். சிறிது நேரம் கழித்து ஊர்க்காவல் படையை சேர்ந்த காவலர் செந்தில்குமார் எனக்கு போன்

செய்து புலியூர் புறக்காவல்நிலையத்தில் ஒரு நபர் சத்தம் போட்டுக்கொண்டிருக்கிறார் என்று சொன்னார். உடனே, நானும் மு.நி.கா. 210 சரவணன் என்பவரும் புறக்காவல்நிலையம் சென்று பார்த்தபோது ஆஜர் எதிரி ஹரிஹரன் எங்களை பார்த்து "கேனப்புண்ட மவனே" என்று திட்டியும், கீழே கிடந்த கல்லை எடுத்து புறக்காவல் நிலையத்தின் முன்பு உள்ள கதவின் கண்ணாடி, ஜன்னல் கண்ணாடிகளை கல்லால் அடித்து உடைத்தார். அதன் மதிப்பு ரூ.5000/– இருக்கும். ஆஜர் எதிரி கண்ணாடியை உடைத்து விட்டு அங்கிருந்து ஓடிவிட்டார். எங்களால் எதிரி பிடிக்க முயற்சி செய்தோம் அவரை முடியவில்லை. பின்னர் காவல்நிலைய அதிகாரிக்கு போன் செய்து தகவல் அளித்தோம். பிறகு நான் பசுபதிபாளையம் காவல்நிலையத்திற்கு சென்று உதவி ஆய்வாளரிடம் புகார் கொடுத்தேன். **நான் கொடுத்த புகார் இது தான். அது அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தான் அது அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அன்று ஆஜர் எதிரியால் அடிக்கப்பட்ட கல் இது தான். அது அ.சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. எதிரி அடித்த கண்ணாடித்துண்டுகள் இதுதான். அது அ.சா.பொ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இது குறித்து உதவி ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

நான் புகாரிலும், காவல் நிலையத்திற்கு போன் மூலம் தந்த தகவலிலும் கூறியதைத்தான் ஆய்வாளரிடமும் கூறியுள்ளேன். நான் பசுபதிபாளையம் காவல்நிலையத்தில் 2020 லிருந்து 2023 வரை பணி செய்தேன். அ.சா.ஆ.1 புகார் வாக்குமூலத்தை நான் பசுபதிபாளையம் காவல்நிலையத்தில் வைத்து 11.30 மணிக்கு எழுதினேன். புகார் கொடுக்கும்போது என்னுடன் காவலர் சரவணக்குமாரும் உடன் இருந்தார். மேற்சொன்ன தேதியன்று பீட்

அலுவலுக்கு சென்றதற்கு காவல்நிலைய நாட்குறிப்பில் கையெழுத்து போட்டு சென்றீர்களா என்றால் உதவி ஆய்வாளர் தான் அதை எழுதுவார். நீங்கள் உங்களிடம் உள்ள பாக்கெட் டைரியை ஆய்வாளரிடம் ஒப்படைத்தீர்களா என்றால் ஞாபகமில்லை. கொரனாகாலகட்டம் முழு ஊரடங்கு காலம் என்று சொன்னால் சரிதான். சம்பவத்தின் போது நானும், சரவணனும், புறக்காவல்நிலைய காவலர் செந்தில்குமாரும் தான் இருந்தோம். புலியூரில் புறக்காவல்நிலையம் நான்கு ரோடு பிரிவில் அமைந்துள்ளது என்று சொன்னால் சரிதான். புறக்காவல்நிலையத்திற்கு அருகில் மெடிக்கல், ஏடிஎம் ஆகியவை நெருக்கமாக உள்ளது என்று சொன்னால் சரிதான். சம்பவ சமயத்தின் போது புறக்காவல்நிலையத்தில் சிசிடிவி கேமராக்கள் இருந்ததா என்றால் இருந்தது. சிசிடிவி புட்டேஜ்களில் பதிவான பதிவுகளை நீதிமன்றத்தில் ஒப்படைத்தீர்களா என்றால் இல்லை. புறக்காவல்நிலையத்தில் மொத்தம் எத்தனை ஜன்னல்கள் உள்ளது என்றால் 2 ஜன்னல்கள் உள்ளது. புறக்காவல்நிலையத்திலுள்ள எந்த பக்க ஜன்னல் உடைந்தது என்றால் மேற்கு திசையில் உள்ள ஜன்னல் கண்ணாடி உடைந்தது. கதவு கிழக்கு திசை நோக்கி உள்ளது. காவலர் செந்தில்குமார் போன் செய்து தகவல் சொன்ன 10 நிமிடத்தில் புறக்காவல்நிலையத்திற்கு சென்றோம். நானும் சரவணனும் காவலர் செந்தில்குமார் போன் செய்த பிறகு 10 நிமிடத்தில் சென்றுவிட்டோம். புறக்காவல்நிலையத்திற்கு வெளியே தான் அ.சா.பொ.1 கல் தான் இருந்தது.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ELAVAZHAGAN

Digitally signed by ELAVAZHAGAN
Date: 2026.02.09 17:49:07 +0000

மாவட்ட அமர்வு நீதிபதி,
கரூர்.

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE OF KARUR.**
**Sessions Case No. 74/2024**

Prosecution Witness : **PW2**

| | | | |
|---|---|---|---|
| **Name** | : சரவணக்குமார் | **Father's Name** | : |
| **Village** | : | **Taluku** | : |
| **Caste** | : | **Calling** | : |
| **Religion** | : | **Age** | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act 44 of 1969 of the 09th day of February 2026.

**(எதிரி இன்று நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ளார். எதிரி தரப்பு வழக்கறிஞர் இன்று நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ளார்.)**

**முதல் விசாரணை**

நான் தற்போது கரூர் நகர போக்குவரத்து காவல்நிலையத்தில் முதல்நிலை காவலராக பணிபுரிந்து அயல்பணியாக பசுபசுபதிபாளையம் போக்குவரத்து காவல்நிலையத்தில் பணிபுரிந்து வருகிறேன். கடந்த 20.01.2022 ஆம் தேதியன்று பசுபதிபாளையம் காவல்நிலையத்தில் முதல் நிலை காவலராக பணிபுரிந்தபோது அன்று இரவு எனக்கும், அ.சா.1 கந்தசாமிக்கும் புலியூர், புரவிபாளையம், கவுண்டம்பாளையம் ஆகிய பகுதிகளுக்கு பீட் அலுவல் ஒதுக்கப்பட்டு அங்கு பணியில் இருந்தோம். ஊர்க்காவல் படையை சேர்ந்த செந்தில்குமார் புலியூர் புறக்காவல்நிலையத்தில் பணியிலிருந்தார். அப்போது கொரானோ காலம் என்பதால் தமிழக அரசு தடை உத்தரவு அமலிலிருந்து

வந்ததால் 10.00 மணிக்கு மேல் கடைகள் மூடப்பட்டுள்ளதா என்றும் பார்த்துக்கொண்டும் மேலும் புலியூரில் உள்ள கடைகளை யாரும் திறக்கக்கூடாது என்று அறிவுறுத்தி கொண்டிருந்தோம். சிறிது நேரம் கழித்து ஊர்க்காவல் படையை சேர்ந்த செந்தில்குமார் புலியூர் புறக்காவல்நிலையத்திலிருந்து அ.சா.1 கந்தசாமிக்கு போன் செய்து புலியூர் புறக்காவல்நிலையத்தில் ஒரு நபர் சத்தம் போட்டுக்கொண்டிருக்கிறார் என்று சொன்னார். உடனே, நானும் அ.சா.1 கந்தசாமியும் புறக்காவல்நிலையம் சென்றோம். அப்போது ஆஜர் எதிரி ஹரிஹரன் தகராறு செய்து கொண்டிருந்தார். அ.சா.1 கந்தசாமி ஏன் தகராறு செய்து கொண்டிருக்கிறீர்கள் இங்கு இருக்கக்கூடாது கிளம்புங்கள் என்று கூறினார். அப்போது ஆஜர் எதிரி அ.சா.1 கந்தசாமியை பார்த்து "நீயெல்லாம் ஒரு ஆளு புண்டையாடா" என்று கூறினார். பின்னர் ஆஜர் எதிரி புறக்காவல்நிலையத்தில் கல் எரிந்தார். அதில் மேற்கே உள்ள அலுமினியம் பிரேம் போட்ட ஜன்னல் கண்ணாடி உள்ளது. ஆஜர் எதிரி கல் எரிந்ததால் புறக்காவல்நிலைய கண்ணாடி உடைந்துவிட்டது. எதிரி கல்லை எரிந்துவிட்டு ஓடிவிட்டார். நாங்கள் ஆஜர் எதிரியை பிடிக்க சென்ற போது அவர் தப்பி ஓடிவிட்டார். நாங்கள் மூவரும் சேர்ந்து துரத்திச்சென்று பிடிக்க முயன்றோம். அவர் வடக்குப்புறமாக சென்று இருட்டாக இருந்த இடத்திற்குள் சென்று மறைந்துவிட்டார். நாங்கள் முழுவதுமாக தேடிப்பார்த்துவிட்டு உதவி ஆய்வாளருக்கு தகவல் கொடுத்தோம். உதவி ஆய்வாளர் காவல்நிலையத்தில் வந்து புகார் அளிக்குமாறு சொன்னார். நானும் கந்தசாமியும் காவல்நிலையத்திற்கு சென்றோம். அங்கு கந்தசாமி சார் புகார் கொடுத்தார், நான் உடன் இருந்தேன். அ.சா.பொ.1 கல் தான் ஆஜர் எதிரி அன்றைய தினம் புறக்காவல்நிலைய கண்ணாடியில் எரிந்தார். அ.சா.பொ.2 கண்ணாடி தான் ஆஜர் எதிரி உடைத்த

கண்ணாடிகள். இது குறித்து உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

மேற்சொன்ன விவரங்களை நான் உதவி ஆய்வாளர் விசாரணையின் போது கூறியுள்ளேன். ஆஜர் எதிரி கல் எரிந்த பிறகு அ.சா.பொ.1 கல் மேற்குப்புறமாக புறக்காவல்நிலையத்தின் கட்டிடத்திற்கு வெளியே கிடந்தது. அ.சா.பொ.1 கல்லிற்கும் எதிரிக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றும் நீங்கள் சொல்வது போல் சொன்ன நேரத்தில் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்று சொன்னால் சரியல்ல. காற்று வேகமாக அடித்து கண்ணாடி உடைந்துவிட்டது என்று சொன்னால் சரியல்ல. அ.சா.பொ.2 கண்ணாடித்துண்டுகள் அடித்த வேகத்தில் புறக்காவல்நிலையத்தின் உள்ளேயும் வெளியேயும் இருந்தது. புறக்காவல்நிலையத்தின் மேற்குப்பக்கம் உள்ள ஜன்னல் கண்ணாடி மட்டும் தான் உடைந்தது.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ELAVAZHAGAN Digitally signed by ELAVAZHAGAN Date: 2026.02.09 17:49:14 +0000

மாவட்ட நீதிபதி,
கரூர்.

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE OF KARUR.**

**Sessions Case No. 74/2024**

Prosecution Witness : **PW3**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **சக்கரவர்த்தி** | **Father's Name** | : | |
| **Village** | : | | **Taluku** | : | |
| **Caste** | : | | **Calling** | : | |
| **Religion** | : | | **Age** | : | |

Solemnly affirmed in accordance with the Provisions of Act 44 of 1969 of the 09th day of February 2026.

**(எதிரி இன்று நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ளார். எதிரி தரப்பு வழக்கறிஞர் இன்று நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ளார்.)**

**முதல் விசாரணை**

நான் தற்போது கரூர் சின்னான்டான் கோவிலில் வசித்து வருகிறேன். நான் ராஜா கிளாஸ் அன்ட் பிளைவுட்ஸ் என்ற கடையை சுமார் 20 வருடங்களாக நடத்தி வருகிறேன். கடந்த 24.01.2022 ஆம் தேதியன்று பசுபதிபாளையம் காவல்நிலைய குற்ற எண்.48/2022 என்ற வழக்கு சம்மந்தமாக உடைந்த கதவு, ஜன்னல் கண்ணாடிகளின் சேதமதிப்பு சான்று கோரி உதவி ஆய்வாளர் என்னிடம் கடிதம் கொடுத்தார். நான் புலியூரில் உள்ள புறக்காவல்நிலையத்தின் ஒரு கதவு கண்ணாடி மற்றும் ஒரு ஜன்னல் கண்ணாடிகள் உடைந்திருந்தது. அவைகளை பார்வையிட்டு உடைந்த

கண்ணாடிகளின் சேதத்தை மதிப்பீடு செய்து அறிக்கையாக தயார் செய்து ஆய்வாளர் வசம் ஒப்படைத்தேன். உடைந்த கண்ணாடிகளின் சேதமதிப்பு ரூ.5072/- என அறிக்கை அளித்துள்ளேன். **நான் வழங்கிய சேதமதிப்பீட்டிற்கான அறிக்கை இது தான். அது அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இது குறித்து காவல்துறையினர் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

நான் மேற்சொன்ன மதிப்பீட்டில் அதற்குரிய அலுமினிய பீடிங் மற்றும் அதற்குரிய ரப்பர், அதற்குரிய கண்ணாடி அனைத்திற்கும் சேர்த்து மதிப்பிட்டு அறிக்கை வழங்கியுள்ளேன். கதவிற்கு 7 அடி உயரம் 3 அடி அகலம் உள்ளது. கதவிற்குரிய கண்ணாடிக்கு மட்டும் ரூ.1386/- என சேத மதிப்பீடு செய்துள்ளேன். கதவிற்கு மொத்தமாக பீடிங், ரப்பர், அலுமினியம் சேர்த்து ரூ.1166/- என மதிப்பீடு செய்து கொடுத்துள்ளேன். ஜன்னல் கண்ணாடிக்கு மொத்தம் ரூ.2520/- என மதிப்பீடு செய்துள்ளேன். அ.சா.பொ.2 ஆனது 5 மி.மி. கண்ணாடி ஆகும். மேற்சொன்ன நான் அளித்த சேதமதிப்பீடில் குறிபிட்டிருப்பது 6 மி.மி கண்ணாடிக்குரியதாகும். 6 மி.மி. கண்ணாடியை விட 5 மி.மி கண்ணாடி விலை குறைவு தான்.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ELAVAZHAGAN Digitally signed by ELAVAZHAGAN Date: 2026.02.09 17:49:20 +0000

மாவட்ட நீதிபதி,
கரூர்.